# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 30 செவ்வாய்க்கிழமை 15.08.2023 கதிர் 50



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்


# மன்னார் மாவட்டத்தை வலுச்சக்தி மையமாக உருவாக்கிட முடியும்!

## மடுத் திருவிழாவில் ஜனாதிபதி





மன்னார், ஒக்.15

மன்னார் - மருதமடு அன்னையின் ஆவணி மாதத் திருவிழா திருப்பலி இன்று காலை 6.15 க்கு ஆரம்பமாகியது.

இம்முறை ஆவணி மாதத் திருவிழாத் திருப்பலியைப் பரிசுத்த பாப்பரசரின் பிரதிநிதி பேராயர் பிறைன் உடைக்குவே ஆண்டகை தலைமையிலான ஆயர்கள் இணைந்து கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுத்தனர். திருவிழா திருப்பலி ஒப்புகொடுக்கப்பட்டதை அடுத்து மடுமாதாவின் திருச்சுரூப பவனி இடம்பெற்றது.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இந்த விசேட வழிபாடுகளில் கலந்துகொண்டார்.

மடு மாதாவுக்கு மகுடம் சூட்டப்பட்டு அடுத்த வருடத்தோடு நூறு ஆண்டுகள் நிறைவடைகின்றன. அதனை நினைவுகூரும் நிகழ்வுகளை வருடம் முழுவதும் நடத்த ஆலய நிர்வாகக் குழு முடிவு செய்துள்ளது. 2

## அரச தொலைக்காட்சி அலைவரிசை தனியாருக்கு வழங்கும் யோசனை நிராகரித்தது அமைச்சரவை!

இலங்கைத் தேசிய தொலைக்காட்சிச் சேவைக்குச் சொந்தமான சனல் ஐ அலைவரிசையை தனியார் நிறுவனத்திற்கு வழங்கும் யோசனையை அமைச்சரவை நிராகரித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தனவினால் இதற்கான யோசனை முன்வைக்கப்பட்டது. 2

## "மீண்டும் இரத்த ஆறு ஓட ஜனாதிபதி அனுமதியார்!"

### - பிரதமர் தினேஷ்

## எண்ணெய் சுத்திகரிப்புத் திட்ட ஒப்பந்தம் ரத்துச் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி

ஹம்பாந்தோட்டையில் எண்ணெய் சுத்திகரிப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தை ரத்துச்செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கை முதலீட்டுச் சபைக்கும் ஹம்பாந்தோட்டை எண்ணெய் சுத்திகரிப்பு தனியார் நிறுவனத்துக்கும் இடையே உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்துவதற்கு கடந்த 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதியன்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

ஏற்றுமதிச் சந்தையை இலக்காகக் கொண்டு நாளொன்றுக்கு 4 இலட்சத்து 20 ஆயிரம் பீப்பாய்கள் கொள்ளளவு கொண்ட பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்காக இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது.

இந்தநிலையில், இரு தரப்பினருக்கும் இடையில் எட்டப்பட்ட ஒப்பந்தத்தின் விதிகளின்படி திட்ட ஆதரவாளர் செயல்படவில்லை என்ற காரணத்தினால் இந்த உடன்படிக்கையை ரத்துச்செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

இதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் என்ற வகையில், ஜனா2




## யாழ்ப்பாணத்தில் வீட்டுக்குள் புகுந்து வன்முறைக் கும்பல் அட்டூழியம்!

### மோட்டார் சைக்கிளும் தீக்கிரை

யாழ்ப்பாணத்தில் வன்முறைக் கும்பல் ஒன்று வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்து, தாக்குதல் நடத்தியுள்ளது. அத்துடன் வீட்டில் இருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றையும் அந்தக் கும்பல் தீக்கிரையாக்கியுள்ளது.

கல்வியங்காடு பூதவராஜர் ஆலயத்துக்கு அருகில் உள்ள வீடொன்றினுள் இன்று அதிகாலை 6 பேர் கொண்ட வன்முறைக் கும்பல் புகுந்து தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

வீட்டில் பொருத்தியிருந்த கண்காணிப்புக் கமரா பதிவுகளின் அடிப்படையில் தாக்குதலாளிகளை அடையாளம் கண்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டில் இருந்து தாக்குதலுக்குப் பணம் கொடுத்து, கூலிப்படையை ஏவி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (03)

## இரண்டாம் தவணைப் பாடசாலை விடுமுறை வரும் 17ஆம் திகதி ஆரம்பமாவதாக அறிவிப்பு

அரச பாடசாலைகள் மற்றும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளுக்கான இரண்டாம் தவணைக்கான முதற்கட்ட விடுமுறை இந்த வாரத்தில் ஆரம்பமாகவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதற்கமைய வரும் 17 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளுக்கான இரண்டாம் தவணைக்கான இரண்டாம் கட்டக் கல்வி நடவடிக்கைகள் இம்மாதம் 28 ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்த வேண்டும்

### டலஸ் அணி வலியுறுத்து

அதிகாரப் பகிர்வு தொடர்பாக கதைப்பதற்கு முன்னர் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் டலஸ் அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

இது தொடர்பாக2

இலங்கையிலிருந்து வெளிவரும் மாலைச் செய்தி இதழ்

# மோட்டார் வாகன இறக்குமதி சிறப்பு வர்த்தமானி வெளியீடு

தடை செய்யப்பட்ட காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் துறைமுகங்களில் இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுவிக்கப்படாது இருக்கும் கனரக வாகனங்கள் விரைவில் விடுவிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதன்மூலம், வாகனங்கள் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகள் அமுலில் இருக்கும்போது நாட்டிற்கு கொண்டு வரப்படும் பொதுப்போக்குவரத்து பேருந்துகள் மற்றும் விசேட தேவைக்கான லொறிகள், டாங்கர்கள், பௌசர்கள் மற்றும் ட்ரக்குகள் என்பன ஆவணங்களைச் சமர்ப்பித்துப் பரிசோதிக்கப்பட்ட பின்னர் 30 வீத கூடுதல் கட்டணத்திற்கு உட்பட்டு விடுவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இன்று நிதியமைச்சகம், பொதுப் போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான வரம்புகளைத் தளர்த்தி, சிறப்பு வர்த்தமானி அறிவிப்பையும் வெளியிட்டுள்ளது. (த)

# சட்டவிரோத எல்லைக்கடப்பின்போது போலந்தில் சிக்கிய இலங்கையர்கள்!



பெலாரஸில் இருந்து போலந்திற்கு சட்டவிரோதமாக பிரவேசிப்பதற்கு முயற்சித்த இலங்கையர்கள் உட்பட பல நாடுகளின் பிரஜைகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

சோமாலியா, எகிப்து, எத்தியோப்பியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளின் பிரஜைகள் 160 பேர், வார இறுதியில் போலந்திற்குள் செல்ல முயன்றனர் என போலந்து ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

நான்கு சிரிய மற்றும் மூன்று பங்களாதேஷ் குடிமக்களை போலந்திற்கு கொண்டுசெல்வதற்கு உதவ முயற்சித்த மூன்று உக்ரேனியப் பிரஜைகளும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த ஆண்டு ஏற்கனவே 500க்கும் மேற்பட்டோர், சட்டவிரோத எல்லைக் கடப்பு நடவடிக்கைகளுக்கு உதவியதற்காக கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் தொடர்பான அடையாளங்களோ மேலதிக விபரங்களோ இதுவரை வெளியிடப்படவில்லை. (க)

# காணாமல் போனோர் அலுவலகத்திற்கு வழிகாட்டு நெறிகளை வழங்க அமைச்சரவை அங்கீகாரம்

காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்திற்கு வழிகாட்டு நெறிகளை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் சட்டத்தின் 11 (இ) பிரிவின் ஏற்பாட்டுக்கமைய, குறித்த அலுவலகத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் புரிதலுக்கு வழிகாட்டு நெறிகளையும் வழங்குதல் வேண்டும்.

மேலும், இவற்றை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய கொள்கைகளை உள்ளடக்கக் கூடியவையான விதிகளையும் வழங்குதல் வேண்டும்.

அதற்கமைய, சட்டமா அதிபரால் வழங்கப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மற்றும் சிபாரிசுகளைக் கருத்தில் கொண்டு குறித்த வழிகாட்டுநெறி தயாரிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான பத்திரம், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல் மறுசீரமைப்பு அமைச்சரினால் நேற்றைய அமைச்சரவைக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், இதற்கு அமைச்சரவையும் அனுமதி வழங்கியுள்ளது.




## அரச தொலைக்காட்சி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சனல் ஐ தொலைக்காட்சியை தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வழங்க கடந்த ஜ/ன் மாதம் இரு தரப்பிற்கும் இடையில் இணக்கம் எட்டப்பட்டிருந்தது.

இந்த நிலையில், சனல் ஐ தொலைக் காட்சியை குறித்த நிறுவனத்திற்கு வழங்கும் திட்டத்திற்காக பணிப்பாளர் சபை மற்றும் ஊடகத்துறை அமைச்சில் அனுமதி பெற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையிலேயே, சனல் ஐ தொலைக்காட்சியை குறித்த தனியார் நிறுவனத்திற்கு வழங்கும் யோசனையை அமைச்சரவை நிராகரித்துள்ளது. (க)

## எண்ணெய் சுத்திகரிப்புத்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திபதி ரணில் விக்ரமசிங்க சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (க)

## மாகாண சபைத் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகங்க ளிடம் கருத்துரைக்கும் போது, அதிகாரப் பகிர்வு தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கதைக்கின்றார். ஆனால், மக்களுக்கு தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி பிர-திநிதிகளைத் தெரிவுசெய்வதற்கு தேர்-தலொன்று இல்லை.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு, கிழக்கு வாக்குகளை இலக்கு வைத்தே 13 ஆவது திருத்தச் சட்டம் பற்றி ஜனா-திபதி பேசுகின்றார். அதேபோல் நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் திசை திருப்பவே முன்கூட்டிய ஜனாதிபதித் தேர் தல் பற்றித் தகவல்கள் பரப்படு கின்றன.

இந்த ஜனாதிபதி முன்கூட்டியே ஜனாதிபதித் தேர்தலை நடத்த மாட்டார். ஆனால், 2024 ஜ/லை இறுதி அல்லது ஓகஸ்ட் முதல் வாரத்துக்குள் ஜனாதிப-தித் தேர்தலுக்கான அறிவிப்பு கட்டாயம் வெளியாக வேண்டும். இதனை எவரும் பிற்போட முடியாது. அரசமைப்பிலும்

## மன்னார் மாவட்டத்தை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் ஏற்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்து பாராட்டுக்குரியது எனவும் வத்திக்கான் மற்றும் கத்தோலிக்க திருச்சபையின் ஆசீர்வாதமும் இதற்குக் கிடைக்கும் எனவும் மடுத் திருவிழாவில் கலந்துகொண்ட இலங்கைக்கான வத்-திக்கான் அப்போஸ்தலிக்க பிரதிநிதி அதி வண. பிரையன் உடைக்வே ஆண்டகை தெரிவித்தார்.

நாட்டில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் பேண வேண்டிய பாரிய பொறுப்பு மதத் தலைவர்களுக்கு உண்டு என்று சுட்டிக்காட்டிய அவர், நாட்டைப் பிளவுபடுத்தும் மத முகவராக மாறுவதா, அல்லது நாட்டை ஒன்றிணைக்கும் மதத் தலைவராக மாறுவதா, என்பது அவரவர் செய்யும் செயற்பாடுகளிலேயே தீர்மானிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, மடுத் தேவாலய வருடாந்த திருவிழா என்பது எமது நாட்டு கலாசாரத்தின் ஓர் அங்கம் என்றே கூற வேண்டும். இந்தத் திருவிழாவை தேசிய நிகழ்வாகக் கருதி அதனைப் பாதுகாக்கவும் தொடர்ச்சியாக நடத்தவும் தேவையான ஆதரவை அரசாங்கம் வழங்கி வருகிறது. அத்தோடு, வருடாந்த மடுத் திருவிழாவை நடத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் அனைத்து அருட்தந்தையர்களுக்கும் அரசாங்கம் சார்பில் எனது நன்றியை தெரிவிக்கிறேன். மடுமாதாவிடம் பிரார்த்தனை செய்து ஆசீர்வாதம் பெற ஏராளமான பக்தர்கள் இங்கு வருகிறார்கள்.

கடந்த வருடம் நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டபோது, பெருமளவான மக்கள் இங்கு வந்து மடு மாதாவின் ஆசீர்வாதத்தையும் பாதுகாப்பையும் நாடினர். அந்த கடினமான நிலைமையில் மடு மாதாவின் ஆசீர்வாதமும் எமக்கு பலமாக அமைந்தது என்பதைக் குறிப்பிடவேண்டும். மடு மாதா குடிகொண்டிருக்கும் இந்த மன்னார் பிரதேசம் அதிகளவு புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தியைக் கொண்ட பிரதேசமாகும்.

இங்கு கிடைக்கும் சூரிய சக்தி, காற்றாலை மற்றும் பசுமை ஆற்றல் மூலம் மன்னார் மாவட்டத்தை வலுச்சக்தி மையமாக உருவாக்க முடியும்.

பூநகரியை எரிசக்திக் கிராமமாக உருவாக்க திட்டமிட்டுள்ளோம். இந்த புனித பூமியும், வனமும் பாதுகாக்கப்படும் வகையிலேயே இந்த அபிவிருத்திச் செயற்பாடுகள் அனைத்தும் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை நான் கூறவிரும்புகின்றேன்.

மேலும், இப்பிரதேசங்களின் அபிவிருத்திப் பணிகளின்போது இங்குள்ள அருட்தந்தைகளின் ஆலோசனைகளையும், வழிகாட்டுதலையும் பெறுமாறு அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளேன். அடுத்த மாதம் முதல் மன்னாரிலிருந்து கொழும்புக்கு நகர்சேர் கடுகதி ரயில் சேவையை ஆரம்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. சார்ள்ஸ் நிர்மலநாதனின் வேண்டுகோளுக்கு இணங்க, நகரங்களுக்கு இடையிலான ரயில் சேவை ஆரம்பிக்கப்படுகிறது. அவரின் வேண்டுகோளுக்கு அமைய வவுனியாவில் சீனித் தொழிற்சாலையொன்றை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கு, அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இந்த அனைத்துச் செயற்பாடுகளின் ஊடாகவும் 2048 ஆம் ஆண்டளவில் அபிவிருத்தியடைந்த இலங்கையை கட்டியெழுப்ப எதிர்பார்க்கிறோம். அதற்கு உங்கள் ஆதரவை எதிர்பார்க்கிறேன், என்று தெரிவித்துள்ளார்.

மன்னார் ஆயர் கலாநிதி அதி வண. இமானுவேல்பெர்ணான்டோ ஆண்டகை, இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி மன்றத் தலைவர் கலாநிதி சந்ரா பெர்ணான்டோ உள்ளிட்ட அருட்தந்தையர்கள், கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, அமைச்சர் நளீன் பெர்னாண்டோ, இராஜாங்க அமைச்சர்கள் அருந்திக பெர்னாண்டோ, காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர்களான காவிந்த ஜயவர்தன, செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக் குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் பெருந்திரளான பக்தர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
- maalaikkathir@gmail.com



# எத்தியோப்பியாவில் வான்வழி தாக்குதலிர் 26 பேர் உயிரிழப்பு!

எத்தியோப்பியாவின் அம்ஹாரா பகுதியில் நடைபெற்ற வான்வழித் தாக்குதலில் குறைந்தது 26 பேர் கொல்லப்பட்டதாக மருத்துவமனை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எத்தியோப்பியாவில் ராணுவத்துக்கும் உள்நாட்டுப் போராளிகளுக்கும் இடையிலான மோதல் காரணமாக இந்தத் தாக்குதல் நடைபெற்றுள்ளது. இது ட்ரோன் மூலமான தாக்குதல் என்று குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மனித உரிமைச் சட்டங்களை மீறுவதாகக் கூறப்படும் அனைத்து மோதல் சம்பவங்களையும் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என மனித உரிமைகள் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

# இஸ்ரேல் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் ஜெரிகோ அகதிகள் முகாமில் இருவர் பலி!


இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்திற்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் நிலவி வருகிறது. பாலஸ்தீனத்தின் காசா முனையை ஹமாஸ் அமைப்பு ஆட்சி செய்கிறது. இந்த அமைப்பை இஸ்ரேல், பயங்கரவாத இயக்கமாக கருதுகிறது. ஹமாஸ் அமைப்பை போன்று மேலும் சில ஆயுதமேந்திய குழுக்கள் காசா முனை, மேற்குகரையில் செயல்பட்டு வருகின்றன.

இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ள மேற்குக்கரையின் ஜெரிகோ அகதிகள் முகாமில் இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் நேற்று இரவு திடீர் சோதனை நடத்தினர். தேடப்படும் குற்றவாளி அகதிகள் முகாமில் பதுங்கி இருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தச் சோதனை நடைபெற்றதாகக் கூறப்பட்டது.

அப்போது அங்கு இருந்த பாலஸ்தீனியர்களில் சிலர் இஸ்ரேலிய பாதுகாப்புப்படையினர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதாகவும், இதனைத் தொடர்ந்து இஸ்ரேலியப் படையினர் பதிலடித் தாக்குதல் நடத்தியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.



இஸ்ரேலியப் படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் குவாசி அல் வாலாஜி என்ற 16 வயதுச் சிறுவனும் 25 வயதான மொகம் நுஜூம் என்ற இளைஞனும் உயிரிழந்தனர். உயிரிழந்த இருவரும் பாலஸ்தீனிய ஆயுதக் குழுவை சேர்ந்தவர்களா? என்பது குறித்து இதுவரை தகவல் வெளியாகவில்லை. இந்த மோதலையடுத்து அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை காணப்படுகிறது.



# மணிப்பூர் மாநிலத்தில் விரைவில் அமைதி திரும்பும் சுதந்திர தின உரையில் மோடி நம்பிக்கை தெரிவிப்பு

இந்தியாவின் சுதந்திர தின விழா நாடு முழுவதும் இன்று கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. இதனை முன்னிட்டு டெல்லி ராஜ்கோட்டில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்தில் இன்று இந்தியப் பிரதமர் மோடி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து, செங்கோட்டைக்குச் சென்ற பிரதமர் மோடி, முப்படைகளின் சிறப்பு அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். இதையடுத்து கோட்டையின் தளத்தில் 21 குண்டுகள் முழங்க தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

கொடியேற்ற நிகழ்வின்போது விமானப்படை ஹெலிகொப்டர்கள் மூலம் மலர்கள் தூவப்பட்டன. இதனைத் தொடர்ந்து நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி உரையாற்றினார்.

அப்போது அவர், "நாட்டு மக்களுக்கு சுதந்திர தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாக இந்தியா திகழ்கிறது. இந்தியாவில் உள்ள 140 கோடி மக்களும் எனது குடும்பத்தினர். சுதந்திரத்திற்காக தியாகம் செய்த அனைவருக்கும் எனது மரியாதையைச் செலுத்துகிறேன்.

சில வாரங்களுக்கு முன்பு மணிப்பூரிலும், நாட்டின் பிற பகுதிகளிலும் வன்முறைச் சம்பவங்கள் நடந்துள்ளன. ஆனால், இப்போது அனைத்து இடங்களிலும் அமைதி திரும்பி வருவதாக செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. சில நாட்களாக மணிப்பூரில் நிலவி வரும் அமைதியை, தொடர்ந்து நீட்டிக்க வேண்டும் என மணிப்பூர் மக்களையும், மாநில அரசையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மணிப்பூர் மாநிலத்தில் விரைவில் அமைதி திரும்பும். இதற்காக மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்பட்டு வருகின்றன." என்று தெரிவித்தார்.

எதிர்கட்சிகளின் அரசியல் கொள்கை என்பது முழுக்க முழுக்க குடும்பத்திற்கானது. குடும்பத்திற்காக மட்டும், குடும்பத்திற்கே அனைத்தும் – என்பதே எதிர்க்கட்சிகளின் கொள்கை. நாட்டில் ஊழலுக்கு எதிராக தொடர்ந்து போராடுவேன். ஊழல்வாதிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதால் எனக்கு எதிர்ப்பு அதிகரித்துள்ளது, என்றும் மோடி குறிப்பிட்டார்.



# ஹவாய் தீவில் காட்டுத் தீ கோர தாண்டவம் பலி எண்ணிக்கை உயரலாம் என அச்சம்!

அமெரிக்காவின் ஹவாய் தீவு பகுதியில் கடந்த வாரம் திடீரென காட்டுத்தீ ஏற்பட்டது. பின்னர் இந்தக் காட்டுத் தீ நகரின் மற்றைய பகுதிகளுக்கும் வேகமாகப் பரவ ஆரம்பித்தது.

இந்தக் காட்டுத் தீயில் சிக்கி இதுவரை குறைந்தபட்சம் 93 பேர் பலியாகியுள்ளனர். அங்கு தொடர்ந்து மீட்புப் பணி நடைபெற்று வருகிறது. பலியானோர் எண்ணிக்கை மேலும் உயரலாம் எனவும் அஞ்சப்படுகிறது.

தற்போது தீ ஓரளவுக்கு கட்டுக்குள் கொண்டு வரப்பட்டதால் நிவாரண முகாம்களில் தங்கி இருந்தவர்கள் தங்களது வீடுகளுக்குத் திரும்பிச் செல்வதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தத் தீ விபத்தில் பல கோடி மதிப்பிலான பொருட்கள் சேதமடைந்திருப்பதால் இயல்பு நிலைக்குத் திரும்ப பல ஆண்டுகள் ஆகும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (க)

# சுதந்திர தின விழாவையொட்டி சென்னை விமான நிலையத்தில் ஏழு அடுக்குப் பாதுகாப்பு

சுதந்திர தின விழா இன்று இந்தியா முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. சுதந்திர தின விழா கொண்டாட்டங்களை சீர்குலைக்க முயற்சி நடப்பதாக மத்திய உளவுத்துறைக்கு வந்த தகவலையடுத்து இந்திய மத்திய உள்துறை அமைச்சகம் நாடு முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகரித்துள்ளது.

இந்தியா முழுவதும் உள்ள விமான நிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள், மக்கள் அதிகமாக கூடும் முக்கியமான ரெயில், பேருந்து நிலையங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் பாதுகாப்பு ஏற்பாடு அதிகரிக்கப்பட்டு கடந்த முதலாம் திகதி முதல் 5 அடுக்கு பாதுகாப்பு முறை அமல்படுத்தப்பட்டுள்ளது.

விமான நிலையத்துக்கு வரும் வாகனங்களும் பயணிகளும் மெட்டல் டிடெக்டர்கள், மோப்ப நாய்கள்



மூலம் தீவிரமாகப் பரிசோதனை செய்த பிறகே உள்ளே அனுமதிக்கப்பட்டனர். விமானத்தில் ஏறும் முன்பதாக பயணிகள் பல்வேறு கட்ட சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். விமான நிலைய வளாகத்தில் துப்பாக்கி ஏந்திய பொலிசார் 24 மணிநேரமும் கண்காணிக்கின்றனர்.

இந்த நிலையில் உச்சகட்ட பாதுகாப்பாக, சென்னை விமான நிலையத்தில் நேற்று முதல் 7 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. சென்னை விமான நிலையம் முழுவதும் முழு பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. வரும் 20 ஆந்திகதி நள்ளிரவு வரை இந்த பாதுகாப்பு விதிமுறைகள் அமலில் இருக்கும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (04)



# கல்முனை உலமா சபையினருக்கும் ஹரீஸ் எம்.பி.க்கும் இடையில் சந்திப்பு

(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்ட கல்முனை அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத் உலமா சபையினருக்கும் முன்னாள் இராஜாங்க அமைச்சரும் "ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ்க்கும் இடையிலான சிநேக பூர்வமான சந்திப்பு நாடாளுமன்ற உறுப்பினரின் கல்முனைக் காரியாலயத்தில் இடம்பெற்றது.

உலமா சபைத்தலைவர் மௌலவி பி.எம்.ஏ ஜலீல் (பாகவி) தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினரைச் சந்தித்த உலமாக்கள், கல்முனை மாநகர எல்லைப் பிரதேசங்களிலும் அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களிலும் ஹலால் இறைச்சி விற்பனையை உறுதிப்படுத்தல் தொடர்பில் கலந்துரையாடினர். கல்முனைப் பிராந்தியத்தில் உள்ள அனாச்சார செயல்களை கட்டுப்படுத்தல், இளைஞர்கள் மத்தியில் தலைதூக்கியுள்ள போதைப் பொருளை இல்லாதொழிக்க முன்னெடுக்கவேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் ஆராய்ந்தனர்.

மேலும், கல்முனை மக்கள் எதிர்நோக்கும் சமூக, சமய, கலாசார மற்றும் பொருளாதார பிரச்சினைகள் பற்றியும் எதிர்கால நலத்திட்டங்கள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

# கிழக்கு மாகாணத்தில் சோலார் பனல்கள் நிறுவ மின்சக்தி அமைச்சர் இணக்கம்!

(நூருல் ஹுதா உமர்)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவிற்கும் இடையிலான கலந்துரையாடல் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சில் நேற்று இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கான சாலை வரைபடத்தைத் திட்டமிடுதல், இந்திய அரசின் நிதி உதவியின் கீழ் அரசு அலுவலகங்கள், பாடசாலைகள், மருத்துவமனைகள் மற்றும் மதத் தலங்களுக்கு இலவச சோலார் பனல்களை நிறுவுதல் ஆகியவற்றை நடைமுறைப்படுத்த அமைச்சர் காஞ்சன விஜயசேகர இணக்கம் தெரிவித்தார்.



இந்தக் கலந்துரையாடலில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர், இலங்கை மின்சார சபையின் தலைவர், பிரதம செயலாளர், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட அரச அதிபர்கள், திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் பல அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.




# அக்கரைப்பற்றில் e- MBD ஆரம்பம்!

(எம்.எப்.நவாஸ்)

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் e- MBD திட்டத்தின் ஓர் அங்கமாக , பற்றுச்சீட்டுக்களுக்கு பதிலாக , குறுஞ்செய்தி மூலம் இலத்திரனியல் பற்றுச்சீட்டு அனுப்பும் செயற்திட்டம் இன்று அக்கரைப்பற்று பிரதேச செயலக, மாவட்டப் பதிவாளர் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் முதன்முறையாக இப்பரீட்சார்த்த நிகழ்வு, பிரதேச செயலாளரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. உதவிப் பிரதேச செயலாளர், மேலதிக மாவட்டப் பதிவாளர், பதிவாளர் பிரிவு உத்தியோகத்தர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# செஞ்சோலைத் தாக்குதல் நினைவேந்தல் பிரான்ஸ் தலைநகரிலும் அனுட்டிப்பு





வள்ளிபுனம் செஞ்சோலை சிறுவர் வளாகத்தின் மீது 2006 ஓகஸ்ட் 14 ஆம் திகதியன்று சிறிலங்கா வான்படையினர் நடாத்திய தாக்குதலில் சாவடைந்த 61 மாணவிகளின் 17 ஆவது ஆண்டு நினைவு நாளும் தாய்த் தமிழகத்தில் தமிழீழ மக்களுக்காய் தன் உடலில் தீ மூட்டி ஆகுதியான தோழர் செங்கொடியின் 12 ஆவது ஆண்டு நினைவேந்தலும் பாரிசு பஸ்ரில் பகுதியில் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்றன.

பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழு - பிரான்சு தமிழ்ப்பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், ஈகைச்சுடர் ஏற்றிவைத்து மலர்வணக்கம் செலுத்தப்பட்டது.

அகவணக்கத்தைத் தொடர்ந்து கலந்துகொண்ட அனைவரும் மலர் வணக்கம் செலுத்தினர். அதனைத் தொடர்ந்து நினைவுரைகள், கவிதை வாசித்தல் என்பன இடம்பெற்றன.

வழமை போன்று பல வெளிநாட்டவர்களும் நினைவேந்தலுக்கான காரணத்தைக் கேட்டு அறிந்துகொண்டனர்.

# சக மாணவிகளுக்கு தண்ணீரில் விசம் கலந்துவைத்த பாடசாலைச் சிறுமி

சக மாணவி கலந்துவைத்த விசத்தன்மையுள்ள நீரைப் பருகிய மாணவிகள் ஆறு பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் இன்றைய தினம் நாராம்மல பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் நடைபெற்றுள்ளதாகச் செய்திகள் கிடைத்துள்ளன.

10 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவி ஒருவர், அதே தரத்தில் கல்வி கற்கும் சக மாணவிகளுடன் ஏற்பட்ட விரோதத்தினால் அந்த மாணவிகளின் தண்ணீர்ப் போத்தல்களில் விசத்தைக் கலந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்துடன் தொடர்புடைய சிறுமியும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நாராம்மல பொலிஸார் தகவல் வழங்கியுள்ளனர்.

# தேசிய கணித ஒலிம்பியாட் போட்டி 10 மாணவர்களுக்குத் தங்கப்பதக்கம்

## வடக்கு கிழக்கில் ஏழு தமிழ் மாணவர்

(வி.ரி. சகாதேவராஜா)

கல்வி அமைச்சு நடத்திய தேசிய கணித ஒலிம்பியாட் போட்டியில் 10 மாணவர்களுக்கு தங்கப்பதக்கம் கிடைத்திருக்கின்றது.

இப்பரீட்சை அண்மையில் கொழும்பு ஆனந்தா கல்லூரியில் நடைபெற்றது. பரீட்சையில் வெற்றிகரமாக சித்தி அடையும் மாணவர்கள் வெளிநாட்டுப் பயிற்சிக்கு அழைத்துச் செல்லப்படுவது வழமை.

இம்முறை இடம்பெற்ற பரீட்சையில் பத்து மாணவர்கள் தங்கப்பதக்கம் பெற்று சாதனை படைத்துள்ளனர்.



**பிரிவு ஒன்று**

எஸ்.அத்துகோரல - கொழும்பு ஆனந்த கல்லூரி - 6- 70 புள்ளிகள்

டி.எஸ்.பிரித்திக்ஷி - சென்மேரிஸ் கல்லூரி திருகோணமலை - 6- 60 புள்ளிகள்

ஜி.அஸ்வின் - திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரி -6- 57 புள்ளிகள்

**பிரிவு இரண்டு**

ஆர். ஆரூரன் - அளவெட்டி அருணோதயா கல்லூரி -8- 50 புள்ளிகள்

எஸ்.ஜினோதிகா - விபுலானந்தா மத்திய கல்லூரி மல்வத்தை-8-45 புள்ளிகள்

ஜி.ரத்நாயக - பதுளை மத்திய கல்லூரி-9- 45 புள்ளிகள்

**பிரிவு மூன்று**

ஏ.அஹமட் - இரத்தினபுரி சிவாலி மகாவித்தியாலயம் -11- 78 புள்ளிகள்

ஜே.லவீந் - வவுனியா தமிழ் மகாவித்தியாலயம் -10- 78 புள்ளிகள்

ஜி.சாந்தித்யன் - சாவகச்சேரி இந்து கல்லூரி -9- 76 புள்ளிகள்

எஸ்.கலாபன் - யாழ்ப்பாணம் இந்து கல்லூரி -11- 76 புள்ளிகள்

இந்தப் பத்து மாணவர்களுள் ஏழு மாணவர்கள் வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழ் மாணவர்கள் ஆவர். வடக்கிலிருந்து நால்வரும் கிழக்கிலிருந்து மூவரும் தெரிவாகியுள்ளனர்.

# கணிதம் கஷ்டமான பாடம் அல்ல! வைத்தியராக வருவது இலட்சியம்!!

## தேசிய ரீதியில் தங்கம் வென்று சாதனை படைத்த மாணவி ஜினோதிகா கூறுகிறார்




கணித பாடம் ஒரு கஷ்டமான பாடமே அல்ல. எனது லட்சியம் வைத்தியராக வருவது, என்று இம்முறை தேசிய ஒலிம்பியாட் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்ற கிழக்கு மாகாண மாணவி சிவரூபன் ஜினோதிகா தெரிவித்தார்.

கல்வி அமைச்சு நடாத்திய சர்வதேச ஒலிம்பி யாட் கணிதப் போட்டியில் தேசிய மட்டத்தில் கிழக்கு மாகாணத்தின் சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட மல்வத்தை விபுலானந்தா மகா வித்தியாலய மாணவி செல்வி சிவரூபன் ஜினோதிகா தங்கப் பதக்கம் பெற்று மகத்தான சாதனை படைத்துள்ளார்.

நேற்றுமுன்தினம்திங்கட்கிழமை மாலை இப்பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டன.

கடந்த வாரம் கொழும்பு ஆனந்தா கல்லூரியில் நடைபெற்ற தேசிய போட்டியில் பிரிவு இரண்டில் யாழ்ப்பாணம் அளவெட்டி அருணோதயம் வித்தியாலய மாணவன் ஆர்.ஆருஜன் 50 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும் தங்கப்பதக்கத்தையும் சுவீகரித்தார்.

45 புள்ளிகளைப் பெற்று கிழக்கு மாகாணத்தின் சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட மல்வத்தை விபுலானந்தா மகா வித்தியாலய மாணவி செல்வி சிவரூபன் ஜினோதிகா தங்கப் பதக்கம் பெற்று இரண்டாம் இடத்தில் மகத்தான சாதனை படைத்துள்ளார்.

இது சம்மாந்துறை வலயத்தில் சர்வதேச ஒலிம்பியாட் சரித்திரத்தில் தங்கம் பெற்ற முதல் சாதனையாகும்.

அவரது நேர்காணல் -

**முதலில் உங்கள் குடும்பம் பற்றி கூறுங்கள்?**

நான் மல்வத்தை கிராமத்தைச் சேர்ந்தவர். எனது தந்தை சிவரூபன், தாய் பிரபாஜினி .நான் குடும்பத்தில் மூத்த பிள்ளை. எனக்கு ஒரேயொரு தங்கை நிருஷ்டிகா. வயது 4 . தந்தையார் ஒரு கூலித் தொழிலாளி.

**உங்கள் கல்வி பற்றிக் கூறவும்?**

நான் முதலாம் வகுப்பில் இருந்து இதுவரைக்கும் மல்வத்தை விபுலானந்த மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று வருகின்றேன்.

**ஒலிம்பியாட் அனுபவம் பற்றிச் சொல்லுங்கள்!**

தரம் ஆறு, ஏழு வகுப்புகளில் கொரோனா கால கட்டம் ஆகையால் பரீட்சைகள் இடம்பெறவில்லை. இம்முறைதான் முதன் முதலில் கணித ஒலிம்பியாட் பரீட்சையில் தோற்றினேன். தேசியப் பரீட்சை கொழும்பு ஆனந்த கல்லூரியில் நடைபெற்றது. புது அனுப வமாக இருந்தது.

**பரீட்சையில் இப்படித் தங்கம் வென்று சாதனை புரிவீர்கள் என்று எதிர்பார்த்தீர்களா?**

உண்மையில் நான் எதிர்பார்க்கவில்லை. முன்பெல்லாம் மாகாண மட்டத்தில் நடைபெற்ற பரீட்சையில் நான் 90 புள்ளிகளைப் பெற்றிருந்தேன். ஆனால், இம்முறை இவ்வாறு 45 புள்ளிகள் பெற்றது கவலை. தேசிய மட்டத்தில் இவ்வாறு தங்கப்பதக்கம் பெறுவேன் என்று நான் நினைத்துப் பார்க்கவில்லை.

**இந்தச் சந்தர்ப்பத்தில் யாருக்கு நன்றி கூற விரும்புகிறீர்கள்?**

என்னைப் படைத்த இறைவனுக்கு முதலில் நன்றி. எனது பெற்றோர், அதிபர், பயிற்சி தந்த ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் நன்றிகள்.

**ஒலிம்பியாட் போட்டிக்கென விஷேடபயிற்சி எடுத்தீர்களா ?**

அப்படி ஒன்றும் பெரிதாக இல்லை. எனது வகுப்பிலும் பாடசாலையிலும் எனக்குப் பயிற்சி வழங்கப்பட்டது. தனியார் வகுப்பு ஒன்று சிவதர்ஷினி என்கின்ற ஆசிரியையிடம் ஏனைய மாணவர்களுடன் சென்றேன். அவர் என்னிடம் பணமே பெறுவதில்லை. மாறாக, ரியூட்டுகள், கடந்த கால வினாப் பத்திரங்கள் அத்தனையும் தந்து எனக்குப் பயிற்சி அளித்தார். அதுவே இந்த வெற்றிக்குக் காரணம் என்று நினைக்கின்றேன்.

**கொழும்பு சென்று வந்த அனுபவத்தைக் கூறுங்கள்?**

தந்தை, தாயுடன் நான் கொழும்புக்குச் சென்று வந்தேன். கொழும்பு செல்வதற்கு பாடசாலை ஆசிரியர்கள் தான் உதவினார்கள். இப்போது பத்து நாள் பயிற்சிக்கு எவ்வாறு கொழும்பு செல்வது என்று யோசிக்கிறேன்.

**ஏன் அப்படி யோசிக்கிறீர்கள்?**

ஏலவே, கொழும்பு சென்று வருவதற்கு ஆசிரியர்கள் உதவினார்கள். இது 10 நாள் என்கின்ற பொழுது நான் செலவுக்கு என்ன செய்வது? என்று யோசிக்கின்றேன். அப்பா கூலித் தொழிலாளி. அதுதான்.

**உங்களுக்குக் கணிதத்தில் எவ்வாறு ஆர்வம் வந்தது?**

எனக்கு ஆறாம் வகுப்பு முதல் கணிதத்தில் ஒரு விதமான ஈர்ப்பு ஏற்பட்டது. தொடர்ந்து எல்லாப் பரீட்சைகளிலும் கணித பாடத்தில் 100 புள்ளிகள் கிடைத்தன. வகுப்பிலே முதல் பிள்ளையாக வருவேன்.

**எதிர்கால லட்சியம் என்ன?**

எனக்கு கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களில் விருப்பம். எனினும் எனது எதிர்கால லட்சியம் வைத்தியராக வருவது.

**வெளிநாட்டிற்குச் செல்ல இருக்கிறீர்கள். இந்த மனநிலையில் உங்களது எதிர்பார்ப்பு என்ன?**

நான் மேலும் படித்து முன்னேற வேண்டும். ஏனைய மாணவர்களும் கணித பாடத்தை கடினம் என்று கணிக்காமல், இலகுவாக எடுத்துக்கொண்டு பயிற்சிகளைச் செய்து கல்வியிலே முன்னேற வேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.

**(பேட்டி கண்டவர் - காரைதீவு நிருபர் சகா)**

# சாதனை மாணவி ஜினோதிகாவை பாடசாலைக்குச் சென்று பாராட்டிய

(காரைதீவு நிருபர்)

சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட மல்வத்தை விபுலானந்தா மகாவித்தியாலயத்தில் இம்முறை தேசிய கணித ஒலிம்பியாட் பரீட்சையில் தங்கப்பதக்கம் பெற்ற மாணவி செல்வி சிவரூபன் ஜினோதிகாவை சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா பாடசாலைக்குச் சென்று வாழ்த்திப் பாராட்டினார்

இந்த நிகழ்வு இன்று, பாடசாலை அதிபர் திருமதி கௌசல்யா ஞானேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளரோடு, பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான ஏ.எல்.மஜீட், திருமதி நிலுபரா ஆகியோரும் உடன் சென்றிருந்தனர்.




சாதனை மாணவி ஜினோதிகாவின் பெற்றோரும் கணிதம் கற்பித்த ஆசிரியர்களும் நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

# இந்தியாவின் 77 ஆவது சுதந்திர தினம் யாழ் துணைத்தூதரகத்தில் அனுட்டிப்பு







யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் இந்தியாவின் 77 ஆவது சுதந்திர தினம் கொடியேற்றப்பட்டு கொண்டாடப்பட்டது.

யாழ்ப்பாணம் மருதடி வீதியில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் இன்று காலை 9 மணியளவில் இந்தியாவின் தேசியக்கொடியை துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் ஏற்றிவைத்தார்.

இந்தியாவின் சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வெளியிட்ட வாழ்த்துச் செய்தியை துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் வாசித்தார்.

இந்த நிகழ்வில் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இந்தியா 1947 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 15 ஆம் திகதி பிரித்தானியாவின் ஆதிக்கத்தில் இருந்து சுதந்திரமடைந்தது. (01)

# புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா

வரலாற்றுச் சிறப்பு மிக்க கிளிநொச்சி, கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த மகோற்சவ பெருவிழாவின் பத்தாம் நாள் தேர்த் திருவிழா நேற்றைய தினம் பக்தர்கள் சூழ மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. (02)








யாழில்
முதல் முறையாக
சிறு கைத்தொழில் முயற்ச்சியாளர்களின்
கொண்டாட்டம்
Tourism
Northern Province
இணைந்து வழங்குவோர்
NCI
CCIY
அனுசரணையாளர்
synamon global
Life
Orient Finance
happymarket.lk
அல்லங்காடி
கொண்டாட்டம்
ஒவ்வொரு
சனிக்கிழமைகளிலும்
04:00PM - 10:00PM
யாழ் கோட்டை
(பண்ணை சுற்றுவட்டம்)
NGO Partner
Sustainability Partner
World Vision
SMILEzone
CCH
IDEA FACTORY
ஊடக அனுசரணை
ஒழுங்கமைப்பாளர்
காலைக்கதிர்
BirdFather
More Social More Business
happymarket.lk
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்